
لا إله إلا الله محمد رسول الله

إن الدين عند الله الإسلام

# Friday Sermon

*23 November 2018*
*(14 Rabi'ul Awwal 1440 AH)*

At Tenkasi – Tamil Nadu



## "WILAYAT IN THE CONTEXT OF ISLAM"

## *"இஸ்லாமிய நோக்கில் விலாயத்"*

# The Tamil Version of Hazrat Khalifathullah's Historical & Important Jummah Sermon

**2018 – ஆண்டு ஹஸ்ரத் கலீ:.பத்துல்லாஹ்வின் இந்திய நாட்டு பயணத்தின்போது தமிழ் நாட்டிலுள்ள தென்காசிப் பகுதியில் அவர் நிகழ்த்திய வரலாற்றுமிக்க ஜுமா பேருரையின் தமிழாக்கம்**



## HAZRAT MUNIR AHMAD AZIM (A)

**Nabiullah, Rassullullah, Khalifathullah, Waliullah, Al-Massih, Al-Mahdi, Mujaddid & Muhyiuddin**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.:பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ:.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

இங்கே, இந்தியாவிற்கு வருகைப் புரிந்த நான் தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய தென்காசியில் எனது முதல் ஜுமா பேருரையினை நிகழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சினை அடைகிறேன். இன்று, நான் இஸ்லாமிய நோக்கில் விலாயத் என்ற தலைப்பினை அடிப்படையாக கொண்டு உரையாற்ற எண்ணுகிறேன்.

உங்கள் அனைவருக்கும் தெரிந்தது போலவே, உலகில் நன்மைகளை விதைத்து தீமை எனும் வேதனையிலிருந்து உலகினை பாதுகாப்பதற்காக

அல்லாஹ் தனது மாபெரும் அருளால் அவன் தேர்ந்தெடுக்கப்பட்ட தனது பிரதிநிதியை அனுப்பி வைத்திருக்கிறான்.

அல்லாஹ்வின் இத்தகு நடைமுறையானது கடந்த காலத்திற்கு மட்டுமானதல்ல. மாறாக இவ்வுலகமானது படைக்கப்பட்ட நாளிலிருந்தே குறிப்பாக பூமியில் மானுட குலமானது தோற்றம் பெற்று வாழ துவங்கியதிலிருந்தே அல்லாஹ் தனது படைப்பினங்களுக்கு நேர்வழியினை கற்பிக்க வேண்டிய வழிமுறைகளுக்கான ஏற்பாடுகளை ஆரம்பித்திருந்தான். இது தொடர்ந்து வரும் ஒரு நடைமுறையாகும். அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட தனது பிரதிநிதிகளுக்கு வழங்கும் பல உயர் பதவிகளில் ஒன்றாகும் விலாயத்.

விலாயத் என்னும் வார்த்தைக்கு அகராதிக் கூறும் பொருளாவது **“அல்குர்ப்” (Al-Qurb)** என்பதாகும். விலாயத் என்ற வார்த்தையானது **“விலா” (Wila)** என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருளாவது **“அருகாமை”** அல்லது **“நெருக்கத்தை அடைதல்”** ஆகும். இஸ்லாமிய நோக்கில் இதன் பொருள், தன்னை படைத்தவனிடமும் அவனது மிக சிறந்த தூதரும் நபிமார்களில் தலைசிறந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களிடமும் நெருக்கத்தினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதாகும். பொது சூழலில் இதற்கு இறை அருகாமை அல்லது வேறு ஏதேனும் வகையிலான அருகாமை எனலாம். ஆனால் இஸ்லாமிய நோக்கில் விலாயத் என்பது அல்லாஹ்விடமும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களிடமும் உள்ள நெருக்கம் ஆகிறது. இதுவே ஷரிஅத்தின்படி விலாயத் **(Wilayat)** அல்லது வலியத் **(Waliyat)** என்பதன் அர்த்தம்.

விலாயத்தின் வரையறைப்படி எல்லா நம்பிக்கையாளர்களும் இறைவனின் வலியாவர்கள். இறைவன் அவர்களின் நண்பனாகயிருக்கின்றான். அதோடு அவர்களை இருளிலிருந்து வெளிச்சப் பாதைக்குள் அவன் கொண்டு வருகின்றான்.

விலாயத்தின் வரையறைப்படி நாம் புரிந்துக்கொள்ள வேண்டிய இன்னொரு காரியம் என்னவென்றால், படைப்பாளனிடம் சிறந்த நோக்கத்துடன் கூடிய அணுகுமுறை மற்றும் உயரிய நிலையிலான நெருக்கம் அவ்லியாக்களுக்கு (**அவ்லாஹ்வின் நண்பர், இஸ்லாமிய புனிதர்)** உள்ளது. உண்மையான நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்விடம் நெருக்கமாகத்தான் இருப்பார்கள். ஆனால் அவ்லியாக்களுக்கு ஒரு குறிப்பிட்ட மற்றும் தனித்துவமான ஒரு நெருக்கம் அல்லாஹ்விடம் காணப்படும். இத்தகு நிலையினை எல்லோருக்கும் பெற்றுக் கொள்வது எளிதல்ல. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஆழமான அன்பு மற்றும் நெருக்கத்தினை ஏற்படுத்தாமல் விலாயத்தை நிலைநாட்ட முடியாது. நபிமார்களின் முத்திரையாக



திகழும் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒரு முன்மாதிரியாக எடுத்துக்கொள்பவர்களுக்கு மிக உயர்ந்த நிலையிலான ஒரு வலியாக மாறிவிடலாம்.

எல்லா கோணத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முழுமை பெற்ற முன்மாதிரியாக இருக்கின்றார். இந்த உரை மூலம் அதை முழுவதும் எடுத்துக் கூற முடியாது. ஆனால் அதற்கு ஒரு உதாரணம் மட்டும் கூற விரும்புகிறேன்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நபித்துவ வாதம் அதாவது இறைத்தொண்டாற்ற துவங்குவதற்கு முன்பாக ஏறக்குறைய 40 ஆண்டுகள் மக்காவில் வாழ்ந்தார். அக்காலத்தில் மக்காவில் காணப்பட்ட நிராகரிப்பவர்கள், விக்ரகங்களை வணங்குபவர்கள் மற்றும் புற இன மக்கள் என இத்தகையோர் நபி அவர்களுக்கு இரண்டு சிறப்பு பெயர்களை வழங்கலானார்கள். அப்பெயர்களில் ஒன்று, அல் அமீன் **(Al- Ameen- நம்பகமானவர்)** இரண்டு, அஸ்-ஸாதிக் **(As-Sadiq- உண்மையை மட்டுமே சொல்கிறவர்)** என்பதாகும். நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய உறவினர்களால் மட்டுமன்றி, அந்நியர்களாலும் இவ்விருச்சிறப்புப் பெயர்களாலே அழைக்கப்பட்டார். அவ்விரு சிறப்பு பண்புகளும் அவரது வாழ்வியல் நடைமுறையில் முழுமையாக பிரதிபலித்ததன் விளைவாகதான், அவ்விரு சிறப்பு பெயர்களும் அவருக்குரியதாக அமைந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிபூரணமான இப்பண்புகளுக்கும் விலாயத்திற்கும் இடையே என்ன தொடர்பு? என்ற ஒரு கேள்வி இவ்விடத்தில் எழலாம்.

இதற்கு சரியான பதிலாவது, ஹஸரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமை பெற்ற பண்புகளை பின்பற்றாமல், உள்ளார்ந்த வகையிலான ஒரு உறவை அவரிடம் ஏற்படுத்தாமல் எவர் ஒருவருக்கும் விலாயத் என்ற உயர் நிலையினை அடைய ஒருபோதும் முடியாது. அவரது பண்புகள் மற்றும் நடைமுறையினை பின்பற்றுவதன் மூலம் அல்லாஹ்வின் அருகாமையினை அடைய முடியும். அதாவது ஒரு வலியாக மாற முடியும். ஆகவே அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒரு முன்மாதிரியாக எடுத்துக்கொள்பவர் விலாயத்தின் உயரிய நிலையினை அடைகிறார்..

கடந்த நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட மஹ்தியாகவும் மஸீஹாகவும் தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் விலாயத்தின் பூரணமான நிலையினை அடைந்து, ஒரு சிறந்த முன்மாதிரியாக திகழ்ந்தார். ஆழமான அன்பு மற்றும் மரியாதையினை அவர் அல்லாஹ்வின் மீது மட்டுமின்றி காத்தமுன் நபியின் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) மீதும் வைத்திருந்தார். **திரு நபி (ஸல்) மீது மிக நெருக்கமான ஒரு உறவை ஏற்படுத்தாமல் இருந்திருந்தால் ஒரு அவ்லியாவாகவோ, இஸ்லாமிய மஹ்தியாகவோ, மஸீஹாகவோ மற்றும் நபியாகவோ ஆக ஒருபோதும் அவருக்கு முடியாமல் இருந்திருக்கும். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது நேர்மையான அன்பு மற்றும் நம்பிக்கை அவருக்கு இல்லாமல் இருந்திருந்தால் அல்லாஹ் அவரை ஒரு போதும் காத்தமுன் நபியின் பிரதிபிம்பமாக எழுப்பியிருந்திருக்கமாட்டான்.**

ஒரு பிம்பமானது ஒரு போதும் உண்மைப் பொருள் ஆகுவதில்லை என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது கண்ணாடியில் பிரதிபலிக்கும் பிம்பமும், உண்மையான பொருளும் ஒன்று என்று கருதுவது அர்த்தமற்றது. ஏனெனில் கண்ணாடியில் தோன்றும் பிம்பம் ஒருபோதும் உண்மை பொருளாக மாறுவதில்லை. இதுவே அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்களுக்கும் இடையிலான பொருத்தம். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) என்னும் முழுமை பெற்ற மாபெரும் நபியின் பிரதிபிம்பமாக மட்டுமே வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அஹமது (அலை) அவர்கள் தோன்றிகொண்டாரேயன்றி நபித்துவத்தின் பூரணதன்மையினை அவர் அடைந்தவரல்ல. அந்த உயரிய நிலையினை பெற எவருக்கும் முடியாது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அஹ்மது (அலை) அவர்கள் மட்டுமல்ல, இறுதி நாள் வரையில் இஸ்லாமில் வருகைதரும் மற்றனைத்தும் மஸீஹ்மார்களும், நபிமார்களும் திரு நபி (ஸல்) அவர்களின் பிரதிபிம்பமாக மட்டும்தான் இருப்பார்கள் அல்லது திகழ்வார்கள். அது ஒருபோதும் அசலல்ல மாறாக அந்த அசலின் பிரதிபலித்தல் அல்லது நிழல் மட்டும் ஆகும்.

**திரு நபி (ஸல்) அவர்கள் ஆத்மீக புதல்வர்களை பெற்றெடுக்கும் தந்தையாக இருக்கிறார். அன்னாரின் உயரிய அந்தஸ்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்காத நிலையில் ஆத்மீக புதல்வர்களாகிய நபிமார்களுக்கு உயிர் கொடுக்கும் தந்தையாக அவர் திகழ்கிறார். ஆகவே அல்லாஹ் மற்றும் அவனது தூதர் நபி(ஸல்) வை பின்பற்றி கொள்ளாத வரையில் விலாயத்தின் நிலையை ஒரு போதும் எவருக்கும் பெற முடியாது என்று மட்டுமல்லாது விலாயத்தின் உயரிய நிலையாகிய மஸீஹ், கலீ:.பத்துல்லாஹ் போன்ற உயர்ந்த தகுதியினை அடைவதற்கும் இயலாது. அதாவது நான் இங்கு கூறுவது, எல்லா நபிமார்களும் மஸீஹ்மார்களும் மற்றும் எல்லா இஸ்லாமிய சீர்திருத்தவாளர்களும் அவ்லியாக்கள் ஆவார்கள். ஆனால் அவ்லியாக்களாகயிருக்கும் எல்லோருக்கும் நபியாகவோ மஸீஹாகவோ கலீபத்துல்லாவாகவோ ஆக முடியாது.**

1900 ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ம் தேதியன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹமது (அலை) அவர்கள் ஆற்றிய ஈதுல் அத்ஹா பேருரையானது அல்லாஹ்வின் புறமிருந்து முழுமையாக அரபி மொழியில் அன்னார் பெற்ற வெளிப்பாடு ஆகும். அப்பேருரையில் காத்தமுன் அவ்லியா (Khatam – an –awliya) அதாவது புனிதர்களில் சிறந்தவர் என்ற உயரிய பதவியினை அல்லாஹ் தனக்கு அளித்து ஆசிர்வதித்திருப்பதாக அன்னார் தெரிவித்திருந்தார். ஆகவே அன்னாரின் காலகட்டத்திலும் அதற்க்கு பின் வரும் காலகட்டத்திலும் தோன்றக் கூடிய புனிதர்கள், மஹ்திமார்கள் மற்றும் நபிமார்கள் ஆகிய அனைவரும் அன்னாரின் மீது நம்பிக்கை கொண்டு பரிபூரணமாக அன்னாரை பின்பற்றிக் கொள்பவர்களாக இருப்பார்கள். இதற்கு சிறந்த உதாரணம் என்பது ஒரு சங்கிலியாகும். அதாவது **இஸ்லாமிய உம்மத்தில் வருகை தரும் சூபிகள், மஸீஹ்மார்கள் மற்றும் நபிமார்கள் போன்ற அச்சங்கிலியின் கண்ணியானது ஒன்றுக்கொன்று கோர்க்கப்பட்ட நிலையில் மிக வலுவாக அமைந்திருக்கிறது. திரு நபி (ஸல்) அவர்கள் அச்சங்கிலியின் மையத்தில் அழகுசேர்க்கும் விதமாக அசைவாடிக்கொண்டிருக்கும் பேழையாக திகழ்கிறார். அப்பேழையானது அச்சங்கிலிக்கு உண்மையான வனப்பு மற்றும் வியப்பினை மேன்மேலும் அளிக்குமாறு ஒளிர்கிறது.**

இறைவன் புறமிருந்து பெற்ற ஒரு வெளிப்பாட்டின் அடிப்படையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். புனிதர்களின் இத்தொடரில் நான் காத்தமாக இருக்கிறேன். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் அம்பியாவாகயிருப்பது போன்று நான் காத்தமுன் அவ்லியாவாக **(Khatam-an-Awliya)** இருக்கிறேன். எனக்கு பிறகு என் வழியில் அதாவது என் உடன்படிக்கையின் கீழ் வந்தவரைத் தவிர வேறு எவருக்கும் வலியுல்லாஹ்வாக **(Waliullah)** வர முடியாது.

உண்மையைத் தேடுபவர்களுக்கு இந்த இறை அறிக்கை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கிறது. முஹம்மதியா சமுதாயம் “காத்தமுன் அம்பியா” **(Khatam-al-anbiya)** என்ற வார்த்தைக்கு நேரடியான அர்த்தத்தை அளித்து, அக்கருத்துக்கு ஏற்றவர் நபித்துவத்தின் வாசலை அவர்கள் அடைந்துவிட்டனர். இஸ்லாம் எனும் மாபெரும் கட்டிடத்தின் இறுதி செங்கல்தான் திரு நபி (ஸல்) என கூறி, அன்னாரின் உயரிய அந்தஸ்தை அவர்கள் அழித்து விட்டனர். அதே நிலைக்கே இன்று அஹ்மதியா மக்களும் தள்ளப்பட்டனர். ஏனெனில் கடந்த நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் இறுதி நபி என்று அவர்களும் கூறிவருகின்றனர். அன்னாருக்கு பிறகு எந்தவொரு மஸீஹும், இறைத்தூதரும் தோன்றமாட்டார்கள் என அஹ்மதியா சமுதாயம் பிரசாரம் மேற்கொண்டுள்ளனர். குத்துபா இல்ஹாமியாவிலுள்ள இந்த வெளிப்பாட்டை பாருங்கள். அதில் மிக தெளிவாக காணலாம்.

ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் காத்தமுன் நபியாக இருப்பது போன்று, நான் காத்தமுன் வலியாக அதாவது வலிகளில் சிறந்தவராக இருக்கிறேன். திரு நபி (ஸல்) மீது அன்பு மற்றும் ஆழமான உறவினை வைத்திருந்ததன் விளைவாக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் விலாயத்தின் உச்சத்தை அடைந்து, நிழல் நபியாக தோன்றினார். அதாவது அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிச்சுவடைப் பின்பற்றுவதன் மூலமாக ஒருவருக்கு விலாயத்தின் உச்சத்தை அடைய முடிகிறது. அப்பொருளில்தான், திரு நபி (ஸல்) அவர்களின் அடிச்சுவடை முழுமையாக பின்பற்றியதன் மூலம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அஹமது (அலை) அவர்கள் காத்தமுன் அவ்லியாவாக உயர்ந்தார்.

இக்காலத்திலும் வரும்காலத்திலும் அவரே முற்றிலும் சிறந்த வலியுல்லாஹ்வாக திகழ்வார். அந்நிலையில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடிச்சுவடை முழுமையாக பின்பற்றுபவர்களை அல்லாஹ் தனது வலியாக எழுப்பிகொள்வான். மட்டுமின்றி அத்தகைய வலிமார்களிலிருந்து நபி மற்றும் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தாளர்கள் தோன்றுவார்கள். திருக்குர்-ஆனில் அல்லாஹ் அளித்திருக்கும் வாக்குறுதிப்படியும் திருநபி (ஸல்) அவர்களின் உறுதியான வாக்குறுதிப்படியும் முஜ்ஜதத்தீதுகள், மஸீஹ்மார்கள் மற்றும் கலீஃபத்துல்லாக்கள் இச்சமுதாயத்திலும் தொடர்ந்து எழும்புவார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹமது (அலை) அவர்களின் தீர்க்கதரிசனங்களும் அன்னாரின் நம்பிக்கையும் இதுவே ஆகும்

மிக விரிவான, இந்தியாவின் இம்மண்ணில் நின்று தென்காசியைச் சார்ந்த என் தோழர்கள் மற்றும் உலகமனைத்திலுமுள்ள என் தோழர்களிடம் நான் கூறுகிறேன். **நான் இந்நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கிறேன். எல்லாம் வல்ல ஏகனாகிய அல்லாஹ்வே என்னை அவ்வாறு**

அழைக்கிறான். அவன் எனக்கு நபித்துவத்தின் ஆடையினை போர்த்தியிருக்கிறான். நான் ஷரியத்தை மெய்ப்பிக்க வந்த நபியாக உள்ளேன். நான் மேன் மேலும் கூறுகிறேன் நான் ஷரியத்தை உண்மைப்படுத்த தோன்றிய ஒரு நபியாக இருக்கிறேன். இஸ்லாம் எனது மார்க்கமாகிறது. திருக்குர் -ஆன் (இறைகட்டளை) எனது கித்தாப் ஆகிறது. அப்துல்லாஹ்வின் புதல்வர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் எனது நபியாக இருக்கிறார். அல்லாஹ் மற்றும் அவனது தூதனாகிய முஹம்மது (ஸல்) மீது ஆழமான தொடர்பு இல்லாமல் இருந்திருந்தால், நான் ஒன்றும் அல்ல. அந்நிலையில் எனக்கு எதுவும் ஆக முடியாது. அதைப்போன்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்களிடத்தில் பற்றுறுதியில்லாமல் எனக்கு மஸீஹ் என்று உரிமை கோரவும் முடியாது. ஏனெனில் அன்னார் இஸ்லாமிய மஸீஹ்மாகளின் தந்தையாக விளங்குகிறார். நான் அன்னாரின் ஆன்மீக புதல்வனாக இருக்கிறேன். அல்லாஹ் என்னை இந்நூற்றாண்டிற்காக எழுப்பியிருக்கிறான். மேலும் அல்லாஹ் என்னை ரூஹுல் குதூசைக் கொண்டு பலப்படுத்தியிருக்கிறான். அல்லாஹ்வின்பால் உங்களுக்கு வழிகாட்டிட நான் தோன்றியிருக்கிறேன்.

2003 ஏப்ரல் 7-ம் தேதியன்று அல்லாஹ்வின் புறமிருந்து ஒரு வெளிப்பாடை நான் பெற்றிருந்தேன். அது ஒரு நீண்ட வெளிப்பாடாக இருப்பதால் அதிலிருந்து சிலவற்றை உங்கள் ஆன்மீக அறிவை வளப்படுத்துவதற்காக கூற விரும்புகிறேன்.

**“எனது முனீர் அஹமது அஸீம்! இந்நூற்றாண்டின் முஹையுத்தீன்! உங்களின் கூட்டத்தில் பிற நபி மார்கள் மட்டுமன்றி ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்களும் உள்ளார். உம் நபியாகிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் அந்தஸ்த்து எல்லையற்றது. அதனை சரியான நிலையில் நீர் விளக்குபவராக இருக்கின்றீர்கள். உங்களை பின்பற்றுகின்றவர்களில் பலர் குத்ப்பு மற்றும் அ.்.ப்தால் எனும் (“Qutb and Abdaal”) நிலையினை அடைந்துள்ளனர். எனது முனீர் அஹமது அஸீம்! நீங்கள் முஹையுத்தீன் என அறியப்படுகிறீர்கள். இம்மதத்தின் பலமாக நீங்கள் இருக்கின்றீர்கள். உங்களின் இச்சமுத்திரத்திலிருந்து ஒரு துளி பெற்றவர் அவர் தனது இலக்கை மிக பாதுகாப்பான நிலையில் அடைவார். புனிதர்களுக்கு எந்நேரமும் உங்களை தேவையாகயிருக்கின்றது. விலாயத் உங்களுடையது, அதனை நீரே பகிர்ந்து அளிப்பவராக இருக்கின்றீர். எனது முஹையுத்தீன்.......**

இந்த சகாப்தத்தில், மிக உன்னதமான இந்த உண்மையினை ஏற்றுக்கொள்வதற்கும் அங்கிகரித்துக் கொள்வதற்குமாக அல்லாஹ் உங்கள் இதயத்தை திறந்து தந்துள்ளான். நீங்கள் அதிர்ஷ்டசாலிகளாவீர்கள். அல்லாஹ் தனது அருட்கொடைகளைக் கொண்டு உங்களை போர்த்திக்கொள்வானாக!

வாழ்வின் இறுதிமூச்சு வரையில் உண்மையான பாதையில் உறுதியுடன் நிலைநிற்பதற்கு உங்களுக்கு அல்லாஹ் உதவி புரிவானாக! இன்ஷா அல்லாஹ். உங்களின் நேர்மையான முயற்சிகள் மூலம் இவ்வுலகிலும் நாளை மறுவுலகிலும் அல்லாஹ்வின் அன்பின் பலனை நீங்கள் அறுவடை செய்யுங்கள். நம் அனைவருடைய இலக்கு என்பது அல்லாஹ்வின் அன்பினை பெறுதல் மட்டுமாகும். உலகின் அனைத்து பகுதியிலும் அல்லாஹ்வின் மகிமையை எட்டவைப்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் மீது தாகம் கொள்ளும் இதயங்கள், அத்தாகத்தை தணித்துக் கொள்வதற்காக இந்நூற்றாண்டின் இறை ஊற்றின் பால் வந்தடைவார்கள். அதாவது இறைவெளிப்பாடு மற்றும் இறைகட்டளைப்படி ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் உருவாகி உள்ளது. அதன் தலைவராக அல்லாஹ்வின் தூதர் இருக்கிறார். இந்த நூற்றாண்டில் அல்லாஹ் தேர்ந்தெடுத்த வலியுல்லாவாகவும் கலீ:.பத்துல்லாவாகவும் அவர் திகழ்கிறார். அல்ஹம்துலில்லாஹ்! நமக்கு மேன்மேலும் அல்லாஹ்வை புகழ்வோம்.

**Translated by:**
*Azim Ahmad (Naib Amir)*
Ph: 7339689239

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
*Amir Kerala South Zone, India*
**Kerala Contact No: 9447001832**

**SIRAJ DEEN SAHIB**
*Amir Tamil Nadu State, India*
**Tamil Nadu Contact No: 7502272774**

**PUBLISHED BY:**
JAMAAT-UL-SAHIH-AL-ISLAM
KALIYAKKAVILAI BRANCH
(TAMILNADU AND KERALA BORDER)
Ph No: 9789180817, 9171977109